# புலி



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# புலி

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# புலி

காட்டிற்கு அரசனான சிங்கத்திற்கு இணையாக காட்டுக்குள் திரியும் விலங்கு புலி. உலக மக்களால் பெருமளவில் விரும்பப்படும் விலங்கு என்ற சிறப்புக்குரியது புலி ஆகும். புலி என்கிற பெயருக்கு இயற்கையாகவே ஒரு மரியாதை உள்ளது. புலியின் பெயரைப் பலர் அடைமொழியாக வைத்திருப்பார்கள். ஆனால் புலிக்கு அடைமொழி கிடையாது. புலியைப் பார்த்தால் ஒன்று பயம் வர வேண்டும், அல்லது ஓடி




ஒளிந்தாக வேண்டும், மனிதனாக இருந்தாலும் விலங்குகளாக இருந்தாலும் இது ஒன்றுதான் வழி. காட்டில் புலி அளவிற்கு பலமான விலங்கினம் இல்லை.

புலி (Pantheratigris) பூனைக்குடும்பத்திலுள்ள மிகப்பெரிய விலங்கு ஆகும். பூனைக் குடும்பத்தில் உள்ள பூனை, சிங்கம், சிறுத்தை, காட்டுப் பூனை உள்ளிட்ட சுமார் 37 வகை விலங்குகளுள் புலியும் ஓர்

பூனை



சிறுத்தை



காட்டுப் பூனை



சிங்கம்



விலங்கு ஆகும். உயிரியலில் இப்பிரிவை ஃபெலிடே (Felidae) என்று அழைப்பர். இது பெரும்பூனை என்ற பேரினத்தில் உள்ள விலங்குகளில் ஆபத்தான முதல் விலங்கு ஆகும். பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த விலங்குகள் அனைத்தும் ஊனுண்ணிகள் ஆகும். சிங்கத்தைத் தவிர மற்ற அனைத்து இனங்களும் தனித்தே வாழ்கின்றன. புலி பாலூட்டி வகையைச் சேர்ந்தது.

புலிகள் பங்களாதேஷ், பூட்டான், கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், நேபாளம், ரஷ்யா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளில் பரவி இருக்கின்றன. புலிகள் பெரும்பாலும் மறைவிடங்களிலேயே வாழ்கின்றன. எனவே அடர்ந்த தாவரங்கள் நிறைந்த பகுதிகள், நீர் நிலைகள் அதிகம் உள்ள இடங்களில்



புலிகள் அதிகம் காணப்படுகின்றன. சிங்கத்துடன் ஒப்பிடும்போது, இவை பெரும்பாலும் மறைந்து கொள்வதற்கு ஏற்ற அடர்ந்த காட்டுப்பகுதியைத் தேர்வுசெய்கின்றன. இது தனக்கென எல்லை வகுத்துக் கொண்டு வாழும் விலங்காகும். புலி இரை தேடவும் தன் குட்டிகளை வளர்க்கவும் ஏதுவாக இருக்கும் வகையில் பெரும்பரப்பளவு நிறைந்த இடங்களில் வாழ்கின்றது. ஒரு பெண் புலி 20 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள இடத்திலும், ஆண் புலி சற்று அதிகமாக 60–100 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள இடத்திலும் வசிக்கின்றது. புலி அனைத்து வித பருவநிலைக் காலங்களிலும் வாழும் தன்மை கொண்டது.

பெரிய பூனையினங்களில் நன்கு நீந்தக்கூடிய விலங்கு புலி. புலிகள் பெரும்பாலும் குளங்கள், ஏரிகள் மற்றும் ஆறுகளில் அடிக்கடி குளிக்கின்றன. மற்ற பூனையினங்கள் போலத் தண்ணீரை ஒதுக்காமல் புலிகள் அவற்றை விரும்பித் தேடிச்செல்லும். அதிக வெப்பமான நேரங்களில் அவை பெரும்பாலும் குளங்களில் குளித்துச் சூட்டைத் தணிக்கின்றன.

ஆண், பெண் புலி



ஆண் புலியின் சராசரி எடை 90 முதல் 300 கிலோகிராம் வரை ஆகும். பெண் புலியின் சராசரி எடை 60 முதல் 180 கிலோகிராம் வரை ஆகும்.

புலியின் தோலில் உள்ள அடர்ந்த உடல் மயிர்கள் பழுப்பு மற்றும் ஆரஞ்சு வகை நிறங்களில் இருக்கும். உடலில் உள்ள செங்குத்தான கருநிறப் பட்டைகள் ஒவ்வொரு புலிக்கும் தனித்துவமாக இருக்கும். வேட்டையின் போது தங்களை மறைத்துக்கொள்ள புலிகளுக்கு இந்தப் பட்டைகள் உதவுகின்றன. இந்தப் பட்டைகளின் வடிவமைப்பானது புலியின் தோலில் இருக்கிறது. பிற பெரிய பூனைகளைப் போலவே புலிகளின் காதுகளின் பின் பகுதியிலும் ஒரு வெண்ணிறப் புள்ளி உள்ளது.

வெண்ணிறப் புள்ளி



புலிகளின் முதுகெலும்பானது நீண்டு சங்கிலி போன்ற அமைப்புடன் காணப்படும். மினுமினுப்பான உடல், உறுதியான மெத்தை போன்ற பாதம், நீண்ட வெண்ணிற மீசை, சொரசொரப்பான நாக்கு,



பாதம்



நாக்கு




மீசை

இவையெல்லாம் புலிக்கும் பூனைக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். பார்வைத் திறனும் கேட்கும் திறனும் இரண்டுக்கும் ஒன்று தான். இரண்டுமே மிகத் திறமையாக பதுங்கி நடக்கும் பழக்கம் உள்ளவை. புலிகள் சத்தத்தையும், அதிக வெளிச்சத்தையும் விரும்புவதில்லை.




புலி வலிமையான முன்னங்கால்களையும் தன் உடலில் பாதியளவு நீளமுள்ள வாலையும் கொண்டுள்ளது. புலியின் வால் **60–110 செ.மீ.** நீளமுடையது. புலியின் பின்னங்கால்கள் முன்னங்கால்களைவிட நீளமானது. முன்னங்கால்களில் 5 விரல்களும் பின்னங்கால்களில் 4 விரல்களும் உள்ளன. புலியின் கால்கள் உறுதியான மற்றும் கூர்மையான பின்வாங்கக்கூடிய ஆயுதங்களைப் போன்ற நகங்களைப் பெற்றுள்ளன.

## கால்கள் மற்றும் நகங்கள்








பெண் புலிகளை விட ஆண் புலிகள் அகலமான முன் பாதங்களைப் பெற்றுள்ளன. காடுகளில் புலிகளின் காலடிச் சுவடுகளை வைத்து உயிரியலாளர்கள் அவற்றின் பாலினத்தைக் கண்டறிகின்றனர். புலி இரவில் மனிதர்களை விட, ஆறு மடங்கு அதிக பார்வைத் திறன் கொண்ட விலங்கு. மனிதர்களைப் போலவே புலியும் வண்ணங்களை அறியும் திறன் கொண்டது.

காலடிச் சுவடு



புலி ஒரே தாவலில் 20–30 அடி முன்னோக்கிப் பாயும் திறன் கொண்டது. உடலில் உள்ள வரிகளைப் பயன்படுத்தி எளிதாக மறைந்து, இரையை வேட்டையாடும். ஒரு நேரத்தில், 40 கிலோ வரை உணவை உட்கொள்ளும். மிக வலுவான கால்களையும் தோள்களையும் பெற்றுள்ள இவை சிங்கங்களைப் போலவே பெரும்பாலும் தன்னைவிட அதிகமான எடையுள்ள விலங்குகளையும் இழுத்து வேட்டையாடக் கூடிய திறனைப் பெற்றுள்ளன. பதுங்கிப் பாய்ந்து வேட்டையாடுவதில் புலிக்கு

பதுங்குதல்



நிகர் புலி தான். அடித்தொண்டையில் இருந்து வரும் உறுமல் சத்தத்துடன் ஒரே பாய்ச்சலில் மான், மாடு, காட்டுப்பன்றி, மறிமான், எருமை என எதுவாயினும் வேட்டையாடிக் கொன்றுவிடுகிறது. புலியின் பெரிய கோரைப்பற்கள் இரையைக் கடித்துக் கிழித்து கொல்லப் பயன்படுகின்றன. புலி, தன் இரை சாகும் வரை அதன் கழுத்தைக் கடித்து நெருக்குகிறது. புலியின் உறுமல் ஒலியானது சுமார் இரண்டு **(2) கிலோ மீட்டர்** வரை

**உறுமல் மற்றும் கோரைப்பற்கள்**



கேட்கும். புலிகளால் பல நாட்கள் உணவின்றி வாழ முடியும் என்ற போதிலும், அவற்றின் பெரிய அளவு காரணமாக அவை மற்ற விலங்குகளை


விட வேகமாக பட்டினியால் இறக்கின்றன. புலி இரண்டு முதல் மூன்று வாரங்களுக்குள் பட்டினியால் இறந்துவிடும். ஆனால் சில வேளைகளில் 30–40 நாட்களுக்குக் கூட உணவு இல்லாமல் உயிர்வாழ முடியும்.

புலியின் உமிழ்நீர் ஒரு இயற்கைக் கிருமி நாசினியாகும். புலி தனது காயங்களைக் குணப்படுத்த உமிழ் நீரையே பயன்படுத்துகிறது. புலிகள் சிறுநீர் கழிப்பதன் மூலமும், மரங்களில் கீறல்களை உண்டாக்குவதன் மூலமும் மற்ற புலிகளுக்குத் தன்னுடைய எல்லையைத் தெரியப்படுத்துகின்றன. சிறுநீரின் வாசனையால், புலியின் வயது, பாலினம் மற்றும் பிற புலிகளை இனப்பெருக்கம் செய்வதற்கான விருப்பத்தைத் தீர்மானிக்க முடியும்.

**கீறல்கள்**



**புலிக்குட்டி**



புலிகளின் இனப்பெருக்கம் பொதுவாக நவம்பர் முதல் ஏப்ரல் வரை அதிகம் நடைபெறுகிறது. புலிகள் தங்கள் குட்டிகளை ஈன்றெடுக்கப் பதினாறு வாரங்கள் ஆகும். புலிகள் 3 முதல் 4 குட்டிகள் வரை ஈன்றெடுக்கும். பிறந்த குட்டிகளின் எடை 1.1 கி.கி இருக்கும். பெண்புலி,பிறந்து சில வாரங்கள் வரை பார்வைத் திறன் இல்லாமல் இருக்கும்

குட்டியைப் பாறை இடுக்கில் உள்ள புதர்களில் மறைவாக வைத்து வளர்க்கும். செந்நாய்கள், சிறுத்தைகள் எனப் புலிக்குட்டியை வேட்டையாடப் பல எதிரிகள் இருந்தாலும், ஆண் புலிகளிடமிருந்து தன்குட்டியைக் காப்பாற்றவே இவை அதிகம் போராடுகின்றன. புலிக்குட்டிகள் தங்கள் தாயின் பராமரிப்பில் ஏறக்குறைய


தாயுடன் புலிக்குட்டி




இரண்டு வயதுவரை வாழ்கின்றன. பிறகு, அவை தங்கள் வாழிடத்தை விட்டுப் பிரிந்து தங்களுக்கென எல்லையை வகுத்துக் கொண்டு தனியாக வாழப் பழகுகின்றன. பெண்புலிகள் பாலின முதிர்ச்சி அடைய 3 முதல் 4 நான்கு ஆண்டுகள் வரை ஆகும். ஆண்புலிகள் 5 ஆண்டுகளில் பாலின முதிர்ச்சி அடைகின்றன.

புலி எவ்வளவு பலமான விலங்காக இருந்தாலும் இயற்கை

அதற்கும் பல பலவீனங்களை வகுத்துத்தான் வைத்திருக்கிறது. புலிக்கும் பலவீனங்கள் இல்லாமல் இல்லை. புலி பலவீனங்களை வெளியே காட்டாமல் பலத்தை மட்டுமே வெளிக்காட்டுவதால்தான் இன்றளவும் கம்பீரமாகவே இருக்கிறது. மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடிய புலியால் தொடர்ந்து ஒரு கிலோமீட்டர் கூட ஓட முடியாது என்பது மிகப்பெரிய பலவீனம். புலி பதுங்குவது பாய்வதற்கு என்று சொல்லுவார்கள். உண்மையில் புலி பதுங்குவது அதனுடைய இயல்பான குணங்களில் ஒன்று. ஏனெனில் அவற்றால் இரையைத் துரத்திக்கொண்டு வெகுதூரம் ஓட முடியாது. இரை பக்கத்தில் வரும்வரை பதுங்கியாக வேண்டும். பதுங்கிப் பாய்ந்தால் மட்டுமே பிழைக்க முடியும். பாய்கிற எல்லா முயற்சிகளிலும் புலி வெற்றியடைந்து விடாது. பத்து முயற்சியில் ஒரு முறைதான் அவை இரையை வேட்டையாடுகின்றன. புலி முதலைகளைக் கூட பயமே இல்லாமல் நீரில் நீந்திச் சென்று கடித்துக் கொன்று, இழுத்து, கரைக்குக் கொண்டு வரும்.




இந்தியாவில் சிவாலிக் மலை, வடகிழக்கு மாநிலங்கள், மத்திய இந்தியா, கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் சூழ்ந்த



மத்திய இந்தியா
சிவாலிக் மலை
மேற்குத் தொடர்ச்சி மலைகள்
வடகிழக்கு மாநிலங்கள்
கிழக்குத் தொடர்ச்சி மலைகள்


வனக்காடுகள் போன்ற இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் புலிகள் வசிக்கின்றன. இதனால் 1973 ஆம் ஆண்டு இந்தியாவின் தேசிய விலங்காக வங்காளப் புலி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய இனப் புலிகள் இந்தியா, நேபாளம், பூடான் மற்றும் வங்கதேசத்தில் காணப்படுகின்றன. இதில் இந்தியக் காடுகளில் மட்டுமே 75 சதவீதம் இந்திய இனப்புலிகள் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் புலிகளைப் பாதுகாப்பதற்காக 1972 ஆம் ஆண்டில் புலிகள் பாதுகாப்புத்திட்டம் (Tiger project) கொண்டுவரப்பட்டது. தொன்றுதொட்டுச் சோழ அரசர்களின் அடையாளச் சின்னமாக புலி விளங்கியது. இந்தியா மட்டுமின்றி வங்காளதேசம், மலேசியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளின் தேசிய விலங்கு புலியாகும்.

## சோழ அரசர்களின் அடையாளச் சின்னம்



உலகளவில் எழுபது சதவீதம் (70%) புலிகளைக் கொண்ட


இந்தியாவில் தற்போது புலிகளின் எண்ணிக்கை மூவாயிரத்தை (3000) நெருங்கியுள்ள நிலையில், இந்தியாவிற்கு அடுத்து அதிகளவு




எண்ணிக்கையில் (433) புலிகள் உள்ள நாடு ரஷ்யா. இதற்கு அடுத்ததாக இந்தோனேஷியா (371), மலேசியா (250), நேபாளம் (198), தாய்லாந்து (189), வங்கதேசம் (106), பூடான் (103), சீனா (7), வியட்நாம் (5), போன்ற நாடுகளின் வரிசையில் ,லாவோஸ் நாட்டில் மட்டும் அதிர்ச்சி தரும்

விதத்தில் இரண்டு (2) புலிகள் மட்டுமே உள்ளன.

## புலியின் வகைகள்




உலகளவில் ஒன்பது வகையான புலி இனங்கள் உள்ளன. அவை வங்கப் புலி, இந்தோ சீனப் புலி, சைபீரியப் புலி, சுமத்ரா புலி, மலேசியப் புலி, தென் சீனப் புலி, பாலி புலி, ஜாவா புலி, காஸ்பியன் புலி முதலியன ஆகும். ஒன்பது புலியினங்களில் ஆறு புலியினங்கள் மட்டுமே உலகில் உள்ளன. பாலி புலி, ஜாவா புலி, காஸ்பியன் புலி இம்மூன்று புலியினங்கள் முற்றிலுமாக அழிந்து விட்டன.

புலி இனத்தில் பெரியது, சைபீரியப் புலி. 6 மீட்டர் வரை நீளமும், அதிகபட்சமாக 300 கி.கி எடை வரை வளரும் தன்மை கொண்டது இவ்வகைப் புலிகள். புலி இனத்தில் சிறியது, பாலி புலி. இந்தோனேஷியாவின் பாலித் தீவில் காணப்பட்டதால் இதற்குப் பாலி புலி எனப் பெயர் வந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புலிகளின் எண்ணிக்கை ஒரு

சைபீரியன் புலி



இலட்சத்துக்கும் அதிகமாக இருந்த நிலையில், 2000 ஆம் ஆண்டில் புலிகளின் எண்ணிக்கை 3000 ஆக சரிந்தது.

பாலி புலி, ஜாவா புலி, காஸ்பியன் புலி இம்மூன்று புலியினங்களைப் போலவே தற்போது வாழ்ந்துவரும் புலி இனங்களும் அருகி வரும் இனங்களாக உள்ளன.

பாலி புலி



| | வாழ்விடம் | சராசரி எடை | சிறப்பு |
|---|---|---|---|
| வங்கப் புலிகள் (Bengal Tiger) | இந்தியா, வங்காளதேசம், பூடான்,நேபாளம், பர்மா | 260 கிலோகிராம் | ராயல் வங்கப்புலிகள் என்று அழைக்கப்படு-கின்றன. |
| சைபீரியப் புலிகள் (Siberian Tiger) | ரஷ்யா,வட கொரிய பனிக்காடு, சீனாவின் வடகிழக்குப் பகுதி | 300 கிலோகிராம் | பனிவாழ் புலிகள் என்று அழைக்கப்படு கின்றன. |
| இந்தோ–சீனப் புலிகள் (Indo–Chinese Tiger) | தென்கிழக்கு ஆசியா | 190 கிலோகிராம் | வங்கப்புலிக ளை விட சிறியது; கருமை நிறம் உடையது. |

| | வாழ்விடம் | சராசரி எடை | சிறப்பு |
|---|---|---|---|
| தென் சீனப் புலிகள் (South China Tiger) | தென் சீனப்பகுதி | 175 கிலோகிராம் | தற்போது உள்ள புலிகளில் சிறிய அரிதான இனம். |
| மலேசியப் புலிகள் (Malayan Tigers) | மலேசிய தீபகற்பம் | 130 கிலோகிராம் | இந்தோ-சீன மற்றும் மலேசிய புலிகள் உடல் வேறுபாடு அற்றவை. |
| சுமத்ரா புலிகள் (Sumatran Tiger) | இந்தோனேசியாவின் சுமத்ரா தீவு | 140 கிலோகிராம் | தற்போது வாழும் புலியின் கிளை இனங்களில் மிகச் சிறியது. |

| | வாழ்விடம் | சராசரி எடை | சிறப்பு |
|---|---|---|---|
| காஸ்பியன் புலிகள் (Caspian Tiger) | துருக்கி, மெசபடோமியா, வட ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா | 240 கிலோகிராம் | பெரிய உடலமைப்பு கொண்டவை. |
| ஜாவா புலிகள் (Javan Tiger) | இந்தோனேசியாவின் ஜாவா தீவு | 140 கிலோகிராம் | இவற்றின் மரபணு சுமத்ரா புலிகளுடன் ஒத்துப் போவதாக உள்ளது. |
| பாலி புலிகள் (Bali Tiger) | இந்தோனேசியாவின் பாலித் தீவு | 100 கிலோகிராம் | இதுவரை பூமியில் இருந்த புலிகளில் மிகச் சிறியது. |

வெள்ளைப் புலி (White tiger) என்பது அரியவகை மரபணுவுடன் கூடிய ஒருவகை புலியாகும். வெள்ளைப் புலிகள் அதன் வரிகளுடன் கூடிய வெண்மை நிறத்தைப் பெற இந்த மரபணுவே காரணமாகும். வெள்ளைப் புலிகள் செம்மஞ்சள் நிறப்புலிகளுடனும் இனப்பெருக்கம் செய்யும். இதனால் அவற்றின் ரோமங்கள் செம்மஞ்சள் நிறத்தில் உருவாகிவிடும். வெள்ளைப் புலி மற்றும் தங்க நிறப் பட்டைப் புலிகள் மரபணு வேறுபாட்டால் உருவானவையே ஆகும். இவை புலியின் கிளை இனங்கள் அல்ல.

## வெள்ளைப் புலி




மற்றொரு மரபணுவானது, வழக்கத்திற்கு மாறான "தங்கநிறப் பட்டை" நிற வேறுபாட்டை உருவாக்குகிறது, சிலநேரங்களில் அது "ஸ்ட்ராபெர்ரி" எனவும் அறியப்படுகிறது. தங்கநிறப் பட்டை புலிகளானது வெளிர் தங்கநிற மென்மயிர், வெளிரிய கால்கள் மற்றும் மங்கிய

ஆரஞ்சுநிறப் பட்டைகளையும் கொண்டுள்ளன. அவற்றின் மென்மயிரானது பெரும்பாலும் இயல்பைவிட சற்று கடினமானதாக இருக்கும். தங்கநிறப் பட்டைப் புலிகளின் எண்ணிக்கை மொத்தம் 30. இதில் மிகக் குறைவானவையே காப்பகப்படுத்தப்பட்டுள்ளன.

புலிகள் பத்து முதல் பதினைந்து ஆண்டுகள் வரை வாழும். வேட்டையாடுதல் மற்றும் பிற விலங்குகளால் எந்த ஒரு பாதிப்பும் நேராமல் இருந்தால் காடுகளில் வாழும் புலிகள் இருபத்தாறு(26) வருடங்கள் வரை உயிர் வாழும்.

## நாகார்ஜுனாசாகர்-ஸ்ரீசைலம் புலிகள் காப்பகம்



இந்தியாவில் பதினெட்டு (18) மாநிலங்களில் ஐம்பது (50) புலிகள் காப்பகங்கள் உள்ளன. அதில் ஆந்திர மாநிலத்தில் உள்ள நாகார்ஜுனாசாகர்–ஸ்ரீசைலம் புலிகள் காப்பகம் தான் பெரியது. சுமார் 3000 சதுர கிலோமீட்டர் பரப்பளவுக்கு மேல், இந்தக் காப்பகம் அமைந்துள்ளது.

## தமிழகத்தில் புலிகள் சரணாலயங்கள் உள்ள இடங்கள்

- **ஆனைமலை** – திருப்பூர் மாவட்டம்
- **முண்டந்துறை** – களக்காடு, திருநெல்வேலி
- **முதுமலை** – நீலகிரி மாவட்டம்
- **சத்தியமங்கலம்** வனவிலங்கு சரணாலயம் – ஈரோடு மாவட்டம்

அடர்ந்த காடுகளே செழிப்பான நாட்டை உருவாக்குகின்றன. காடுகள் சிறப்பாக இருக்க வன உயிர்கள் அவசியம். தாவர உண்ணிகள், மாமிச உண்ணிகள், பறவைகள், பூச்சிகள் ஆகிய அனைத்துமே காடுகள் செழிக்கக் காரணமாகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை, புலிகள் அதிகமாக இருந்தால் அங்கு மான்கள், வரையாடுகள், யானைகள், கழுதைப் புலிகள், காட்டுப் பன்றிகள் போன்றவை இருக்கும். தாவர உண்ணிகள் மட்டும் அதிகமாக இருந்தால் வனமே அழிந்துவிடும். அதைக் கட்டுப்படுத்துவது புலிகளால் நிகழ்கிறது. புலி ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு. புலிகள் பெரும்பாலும் மனிதர்களைத் தாக்குவதில்லை.

பல்லிழந்த, வயது முதிர்ந்த புலிகள் தமக்குத் தேவையான இரையை வேட்டையாடத் தேவையான திறன் இல்லாததால் மனிதர்களை உண்ண முயற்சிக்கின்றன.

## புலியின் தோல்



காட்டிலுள்ள புலிகளின் எண்ணிக்கையானது தோலுக்காக வேட்டையாடுதல் மற்றும் அதன் இருப்பிடத்தை அழித்தல் ஆகிய செயல்களால் மிகவும் குறைந்துவிட்டது. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகில் 1,00,000 புலிகளாக மதிப்பிடப்பட்டிருந்த புலிகளின் எண்ணிக்கை தற்போது 2,000 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது.

புலிகள் அழிந்து வருவதற்குக் காடுகளை அழிப்பதுதான் முதல் காரணம். பரந்த அளவில் புலிகளை வேட்டையாடுதல் மற்றொரு முக்கிய காரணம். புலியைக் கொன்று ஒருவன் சமூகத்தில் பெரிய வீரனாக மதிக்கப்பட்ட காலம் முன்பு இருந்தது. இப்போது அந்த நிலை இல்லை என்பது ஆறுதல் அளிப்பதாக உள்ளது. புலியின் தோலும், மீசையும், பல்லும், நகமும், மாமிசமும், கொழுப்பும் மனிதனுக்குப் பயன்படும் என்று ஒரு காலத்தில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். புலித்தோலை

விரிப்பாகப் பயன்படுத்துவது என்பது செல்வச் செழிப்பைக் குறிப்பதாகவும், வெற்றியைக் குறிப்பதாகவும் இருந்தது. இப்படியெல்லாம் மூட நம்பிக்கைகள் இருந்த போதும் புலிகள் முற்றிலும் அழியாமல் தப்பியது அதிசயம்தான். உலகப் புலிகள் தினம் ஜூலை 29–ம் தேதி உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது.

மனிதர்களின் சுகாதாரமான வாழ்க்கைக்குச் சுத்தமான காற்றும் நீரும் அவசியம். அவை இரண்டையும் தருவது காடுகளே. அந்தக் காடுகளைக் காக்க உதவும் புலிகளை நாம் பாதுகாப்பதன் மூலம் மட்டுமே நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பதுங்கிப் பாயும்

**வேட்டைக்காரன் !!**

பாய்வதிலே

**கெட்டிக்காரன் !!**

கானகத்தைக் காக்கும்

**காவல்காரன் !!**

உணவுச்சங்கிலியில் உன்னதப்

**பணியாற்றுபவன் !!**

உறுமல் ஒலிக்குச்

**சொந்தக்காரன் !!**



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com